Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 155

திங்கட்கிழமை
29 ஏப்ரல் 2024

சித்திரை 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## காய்ச்சலால் சிறுமி சாவு!

யாழ்., ஏப். 29

தொடர் காய்ச்சல் மற்றும் வாந்தி காரணமாக உடல்நிலை பாதிக்கப்பட்ட சிறுமியொருவர் திடீரென உயிரிழந்துள்ளார். ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் சஸ்மிதா (வயது-5) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட சிறுமி அச்சுவேலிப் பிரதேச மருத்துவ 11

# தமிழர்களின் நிலைப்பாட்டினை உலகம் உணரவே பொதுவேட்பாளர்



## ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழரசின் தலைவர் சிறீதரன் தெரிவிப்பு

**கிளிநொச்சி, ஏப்ரல் 29**

**இந்த நாட்டில் 18 இலட்சம் தமிழர்களின் வாக்குகள் உள்ளன. அவற்றை தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு வழங்குவதன் ஊடாக தமிழ் மக்கள் தங்கள் அபிலாஷைகளை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைப்பதற்கும், அந்த அபிலாஷைகளுக்கு ஆணை வழங்குவதற்கும் வாய்ப்புக் கிடைக்கும் - இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.** 11

## முச்சந்தி முரளி



"இப்ப இனிமேல் சோதினைக்கு போற பிள்ளையள் உந்த உடற்சோதினையிலும் பாஸ் பண்ணோணும் போல"

## ஊடகவியலாளர் ரஜிவர்மனின் 17ஆவது ஆண்டு நினைவுநாள்



யாழ்ப்பாணம், ஏப். 29

'உதயன்' பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளராகப் பணியாற்றிய காலத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட செ.ரஜிவர்மனின் 17ஆவது ஆண்டுநினைவுநாள் இன்றாகும்.

ஏ-9வீதிமூடப்பட்டுகுடாநாட்டில் இளைஞர்கள்வெள்ளைவானில் ஒட்டுக்குழுக்களால் கடத்தப்பட்டும்சுட்டுக்கொல்லப்பட்டதுமான 2007ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே, அதி உயர் பாதுகாப்பு பிரதேசமாக இருந்த ஸ்ரான்லி வீதியும், இராசாவின்தோட்டப் பகுதியும் சந்திக்கும் இடத்தில் வைத்து ரஜிவர்மன் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தான். 11

## குளிக்கச் சென்றவர் கடலில் மாயம்!

முல்லைத்தீவு, ஏப். 29

முல்லைத்தீவு, நாயாறு கடலில் குளிக்கச் சென்ற 5 பேரில் கொடிகாமத்தைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டு காணாமற்போயுள்ளார். 11

## போதைப்பொருளுடன் இளைஞன் கைது

வவுனியா, ஏப். 29

பூந்தோட்டத்தில் 70 போதைமாத்திரைகள் மற்றும் கஞ்சா கலந்த மாவாப் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். 11

## அபிவிருத்தி அலுவலர்கள் இன்று சுகவீன விடுமுறை

யாழ்ப்பாணம், ஏப். 29

தமது தொழில்சார் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு கோரியும், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் 11

### க.பொ.த.சா.தரப் பரீட்சை மண்டபத்துக்குள்

## உடற்சோதனையின் பின்னரே பரீட்சார்த்திகள் அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 29

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளை இம்முறை உடற்சோதனையின் பின்னரே அனுமதிப்பது தொடர்பில் பரீட்சைத் திணைக்களம் தீவிரமாக ஆராய்ந்து வருவதுடன், பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுவோருக்கும் இது தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை அடுத்த மாதம் 6ஆம் திகதி ஆரம்பமா 11



### கிளிநொச்சியில்

## தங்கக் கட்டியுடன் மூவர் கைது

கிளிநொச்சி, ஏப். 29

சொகுசுக்காரில் பயணித்த இரண்டு பெண்கள் உட்பட மூவரிடமிருந்து 4 கிலோ 170 கிராம் எடையுடைய தங்கக் கட்டி மீட்கப்பட்டுள்ளது. 11

### வடக்குக் கல்விப் புலத்தில்

## தண்டிக்கப்படவேண்டியோருக்கு பதவி உயர்வு வழங்கும் விநோதம்!

### சாடுகிறார் சந்திரசேகரன்

யாழ்ப்பாணம், ஏப். 29

வடக்கு மாகாணக் கல்விப் புலத்தில் மாத்திரம்தான் தண்டனை வழங்கப்பட வேண்டியவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கி அவர்களைக் காப்பாற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என ஜே.வி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான 11

### பாரதிபுரம் தமிழர்கள் கொலை:

## 26 ஆண்டுகளின் பின்னர் பொலிஸாருக்குத் தண்டனை

கொழும்பு, ஏப். 29

திருகோணமலை, பாரதிபுரத்தில் இடம்பெற்ற ஆட்கொலைச் சம்பவத்தில் தொடர்புபட்டிருந்த பொலிஸ் அலுவலர்கள் ஐவருக்கு 26 வருடங்களின் பின்னர் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் மயப்படுத்தப்படுகிறது பல்கலைக்கழக இலவசக்கல்வி

## கிழக்குப் பல்கலை மாணவர்கள் போராட்டம்

கொழும்பு, ஏப். 29

**தனியார் மருத்துவப் பல்கலைக்கழகத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அரச பல்கலைக்கழகங்களின் வசதி வாய்ப்பை ஏற்படுத்துமாறு வலியுறுத்தியும் மட்டக்களப்பில் கடந்த வெள்ளிக்கிழமை போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.**




கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்புப்பீடத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு நகரில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

கொத்தலாவல பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தை தனியார் மயப்படுத்தி, அரச பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகளை முடக்கும் வகையிலான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கொத்தலாவல மருத்துவ கறுப்புச் சந்தையை உடனடியாக நிறுத்தி அரச பல்கலைக்கழகங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்க வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-555)



# வாழ்வாதாரத் தோட்டம் விஷமிகளால் அழிப்பு!

## கல்லாறுப் பகுதியில் சம்பவம்

கிளிநொச்சி, ஏப். 29

கிளிநொச்சி கல்லாறுப் பகுதியில் வாழ்வாதாரத்துக்கு வழங்கிய மிளகாய்த் தோட்டமொன்று விஷமிகளால் அழிக்கப்பட்டுள்ளது.

பெண் தலைமைத்துவக் குடும்பம் உள்ளிட்ட இரு தரப்பினருக்காக வழங்கப்பட்ட தூவல்முறையில் பயிரிடப்பட்ட மிளகாய்த் தோட்டமே இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தோட்டத்துக்குள் பொருத்தப்பட்டிருந்த நீர்விநியோகக் குழாய்கள் அடித்து நொருக்கப்பட்டதுடன் சூரிய வெளிச்சத்தைக் கட்டுப்படுத்துவதற்காகப் பொருத்தப்பட்ட துணிகளும் கிழித்தெறியப்பட்டுள்ளன. இதுதொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (ம-214)

# 5 கிராம் ஹெரோய்னுடன் பெண்ணொருவர் கைது

கிளிநொச்சி, ஏப். 29

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருநகர் பகுதியில் ஐந்து கிராம் ஹெரோய்னுடன் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

# போதைப்பொருள் மறுவாழ்வு: புதிதாக 230 நிலையங்கள்

கொழும்பு, ஏப். 29

நாட்டில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 230 புனர்வாழ்வு நிலையங்கள் புதிதாக அமைக்கப்படவுள்ளன என்று தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

இந்தப் புனர்வாழ்வு நிலையங்களின் சேவைகள் எதிர்வரும் மே மாதம் 7ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நாட்டில் 'யுக்திய' நடவடிக்கையில் அதிகளவான போதைப்பாவனையாளர்கள் நாளுக்குநாள் இனங்காணப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (ச-இ)

# கட்டாக்காலிகளால் நெற்பயிர்கள் அழிவு

முல்லைத்தீவு, ஏப். 29

ஒட்டுசுட்டான் கற்சிலைமடுப் பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளால் பயிரழிவு ஏற்படுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இரவு வேளைகளில் கால்நடைகள் பட்டிகளில் அடைக்கப்படாது அவிழ்த்து விடப்படுகின்றன.

இதனால் அவை நெல்வயல்களுக்குள் புகுந்து பயிர்களை அழிக்கின்றன.

அத்துடன் கால்நடைகள் இரவு நேரங்களில் வீதிகளில் படுத்துறங்குவதால் வீதி விபத்துகளும் நேரிடுகின்றன.

எனவே கால்நடைகளைக் கட்டுப்படுத்தி பயிரழிவைத் தடுக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-500)

# ரூ.160 மில். பெறுமதியான ஹெரோய்ன் மீட்பு!

கொழும்பு, ஏப். 29

மஹரகம - நாவின்ன பிரதேசத்தில் 8 கிலோ ஹெரோய்ன் போதைப்பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன் பெறுமதி 160 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

45 வயதுடைய சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)






# ரூ.40 கோடி பெறுமதியான போதைப்பொருளுடன் இளைஞர் கைதானார்

கொழும்பு, ஏப். 29

சுமார் 40 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள்களுடன் 31 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பியகம விசேட பொலிஸ் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். 14 கிலோ ஐஸ் போதைப் பொருள், 15 கிலோ ஹேஷ் போதைப் பொருள்மற்றும் 941கிராம்ஹெரோய்ன் என்பன அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (த-44)

# ரூ. 15 லட்சம் பெறுமதியான ஐஸ்போதை மீட்பு

கொழும்பு, ஏப். 29

'யுக்திய' நடவடிக்கையின்போது 15 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான ஐஸ்போதைப்பொருளுடன் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிக்கட - கலபாலுவாவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட 'யுக்திய' நடவடிக்கையின்போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார். கைதான நபரிடமிருந்து 104 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும் அதன் மூலம் பெறப்பட்ட பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# இருந்த இடத்திலேயே பொலிஸ் முறைப்பாடு

## இனி நடைமுறை

கொழும்பு, ஏப். 29

ஒன்லைன் ஊடாக பொதுமக்களின் முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் புதிய வழிமுறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய இனிமேல் பொதுமக்கள் முதற்கட்ட முறைப்பாட்டைக் கொடுக்க பொலிஸ் நிலையம் செல்ல வேண்டியதில்லை. முறைப்பாடுகளை tell IGP என்ற இணையத்தளம் மூலமாக பொலிஸ் நிலையம் மற்றும் அப்பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் உதவி கண்காணிப்பாளர், சிரேஷ்ட கண்காணிப்பாளர் ஆகியோருக்கு அளிக்கலாம்.

முறைப்பாடு செய்பவர் இருக்கும் இடத்துக்கு உடனடியாக பொலிஸ் குழுக்களை அனுப்பிவைக்கப்பட்டு முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஆலோசனையின் பேரில் கொழும்பு மாவட்டத்தில் இந்தப் புதிய முறை முதலில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாகாணசபை முறைமையால் தமிழருக்கு தீர்வு கிடைக்காது

## அநுரகுமார கூறுகின்றார்

கொழும்பு, ஏப். 29

**பல ஆண்டுகளாக ஆட்சியாளர்களால் தொடர்ந்து மறுக்கப்பட்டு வந்த தமிழ் மக்களின் அதிகாரத்துக்கான நியாயமான உரிமை பெற்றுக் கொடுக்கப்படல்வேண்டும். மாகாணசபைமுறையால் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை வழங்காது.**

-இவ்வாறு 'சண்டே ரைம்ஸ்' ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் ஜே.வி.பி.யின் தலைவர் அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் இனப்பிரச்சினைக்கு மாகாணசபை முறையே முழுமையான தீர்வு என நாங்கள் கருதவில்லை. வடக்கு - கிழக்கு மக்கள் மாகாணசபைகளை தங்களின் உரிமைகளில் ஒன்று எனக் கருதுகின்றனர். இலங்கையில் பல வருடங்களாக அரசியல் என்பது ஒரு சமூகத்தை மற்றைய சமூகத்துடன் மோத விடுவதாகக் காணப்படுகின்றது. ஒருவரை ஒருவர்தூண்டிவிடுகின்ற பிரிவினைவாத அரசியல் கலாசாரத்தால் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியாது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கான முதல் நடவடிக்கையாக சமூகங்களைப் பிரிப்பதற்கு பதில் அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைக்கும் அரசியல் முறையை உருவாக்கவேண்டும். நாங்கள் அதனையே செய்கின்றோம்- செய்வோம் - என்றார். (ச-இ)

# பொம்மையல்ல நான் சட்டம் நன்கறிந்தவன்



## விஜயதாஸ பதிலடி

கொழும்பு, ஏப். 29

பஸில் ராஜபக்ச கூறுவதற்கேற்ப ஆட, நான் ஒன்றும் பொம்மை இல்லை. நான் சட்டத்தை நன்றாக அறிந்த நீதி அமைச்சர்.

-இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நான் நியமிக்கப்பட்டதற்கு என்னை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்க பஸில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழு என்னைப் பதில் தலைவராக நியமித்தமையானது சட்டபூர்வமாகவே நடைபெற்றுள்ளது. அதனை யாரும் கேள்விக்குட்படுத்துடியாது. பஸில் ராஜபக்ச முடிந்ததை செய்துகொள்ளட்டும். அதனை நீதிமன்றத்தில் சந்திக்க நான் தயாராகவே உள்ளேன் - என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# சொகுசு வாகனங்களால் எம்.பி.க்கள் திண்டாட்டம்

கொழும்பு, ஏப். 29

நாட்டில் நிலவும் பொருளாதாரச் சிக்கல்களால் சொகுசு வாகனங்களைப் பராமரிக்கமுடியாது என நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் நெருக்கடியைச் சந்திக்கின்றனர் என்று தகவல் வெளியாகியுள்ளன.

எரிபொருள் விலையேற்றம் உள்ளிட்ட இதரபல நெருக்கடிகளால் சுமார் 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரையானோர் சிறிய வாகனங்களைப் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் நாடாளுமன்ற கூட்டங்களில் கலந்துகொள்வதற்கும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கும் தயக்கம் காட்டி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேருந்துகள் மற்றும் தொடருந்துகள் உட்பட பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது. (ச-இ)

# விஜயதாஸ இடத்துக்கு வருகிறாரா தம்மிக்க?

கொழும்பு, ஏப். 29

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவை அமைச்சரவையில் இருந்து நீக்கிவிட்டு, அவருக்கு பதிலாக அமைச்சரவைக்குள் தம்மிக்க பெரேராவை உள்வாங்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுள்ளதாகவும், அமைச்சரவையை மறுசீரமைத்தால் நீதிய மைச்சுப் பதவி சுசில் பிரேமஜயந்தவுக்கும், கல்வி அமைச்சு தம்மிக்க பெரேராவுக்கும் வழங்கப்படக்கூடும் எனவும் அரச வட்டாரத்தில் அறியமுடிகின்றது.

இதேவேளை- விஜயதாஸ ராஜபக்ச விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதுவரை எந்தவிதக் கருத்துகளையும் முன்வைக்கவில்லை. (ச-இ)


## புத்தாண்டின்போது

# இ.போ.ச. வருமானம் 1,500 மில்லியன் ரூபா

கொழும்பு, ஏப். 29

சித்திரைப் புத்தாண்டின்போது இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சுமார் ஆயிரத்து 500 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது.

ஏப்ரல் 5ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை இந்த வருமானம் கிடைத்துள்ளது என்று இலங்கை போக்குவரத்துச் சபை தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்தார். (ச-இ)



# பிராந்தியப் பாதுகாப்புக்கு ஆஸி.விமானம் வழங்கும்

ஆசியப் பெருங்கடல் பிராந்தியத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கைக்கு சிறப்பு கண்காணிப்பு விமானமொன்றை அவுஸ்திரேலியா வழங்கவுள்ளது. அவுஸ்திரேலிய வெளிநாட்டலுவல்கள் மற்றும் வர்த்தக திணைக்களத்தின் பிரதிச் செயலாளர் மிச்சேல் சங் தனது இலங்கைப் பயணத்தின்போது தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்கவிடம் இதனைத் தெரிவித்தார். சட்டவிரோதக் குடியேற்றங்கள் மற்றும் ஆட்கடத்தல் என்பவற்றைத் தடுப்பது உள்ளிட்ட இலங்கையின் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு முதற்கட்டமாக இந்த விமானம் வழங்கப்படவுள்ளது என்றும் மிச்சேல் சங் தெரிவித்தார். (ச-இ)



# புதினம் தெரியுமோ?

**ஆ**யிரம் கொடுத்து ஆனை வாங்கினவன் அஞ்சு காசுக்கு அங்குசம் வாங்கப்பேரம்பண்ணினானாம். இப்பிடித்தான் இருக்குது உந்த யாழ்ப்பாணம் 'பூநகரி றோட்டில இருக்கிற சங்குப்பிட்டியின்ர நிலைமை. கோடிக்கணக்கில காசைக் கொட்டி போட்ட சங்குப்பிட்டிப் பாலத்துக்கு வடிவே அங்க போடுப்பட்ட அந்த சோலர் லைற்றுகள்தான். இரவில அந்தப் பாலத்தால ஏறி இறங்கிப் போகேக்க றோட்டு நீளமும் இந்த சோலர் விளக்குகள் அப்பிடியே வரிசையா எரிய, அந்த வெளிச்சம் கடலில பட்டுத் தெறிக்க... சும்மா சொல்லக்கூடாது வெளிநாடுகளிலகூட இப்பிடி ஒரு காட்சியைக் காணேலாது. அந்தளவுக்கு அம்சமா இருந்தது. கனபேர் இதுக்காகவே அங்க இரவிலபோய் ஷூட்டிங் எல்லாம் எடுத்தவை. ஆனால் எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தானே.

இப்ப சங்குப்பிட்டிப் பாலமும் கறுத்து, கறள் பிடிச்சு எலும்புக்கூடு மாதிரி மாற, அங்க போடுபட்ட 106 சோலர் லைற்றுகளும் செத்துப்போய், அந்த றோட்டே இரவில பேய்றோட் மாதிரிக் கிடக்குது. இருந்திட்டு ஒண்டிரண்டு லைற்றுகள் மட்டும் மிச்சமிருக்கிற உயிரைக் கையில பிடிச்சுக் கொண்டு கண்ணடிச்சு 'எங்களைக் காப்பாத்த மாட்டியளோ?' எண்டு கெஞ்சுறதை அந்த றோட்டால பிக்கப்பில பறந்து திரியிற வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காரர் கண்டுகொள்ளுறதேயில்லை. இந்த 106 லைற்றுகளின்ரயும் சோலர் பற்றரி பழுதாப்போட்டுது. ஒண்டிரண்டு பற்றரியளை எங்கட விண்ணர்மார் சிலர் கழட்டிக்கொண்டும் போட்டினம். உந்த லைற் ஒண்டின்ர அப்பத்தைப் பெறுமதி ரண்டரை லட்சம். இப்பவெண்டால் 5 லட்சத்துக்கு மேல வருமாம். அப்ப 106 லைற்றுக்கும் 5 கோடிக்கும் மேல வரும். ஆனால் தங்களிட்ட அவ்வளவு காசில்லை என்டிட்டு உதுக்குப் பொறுப்பான கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிமார், தரையில கால் படாமல் காருகளில ஓடித்திரியினமே தவிர உருப்படியா வேற ஏதும் வழி இருக்கோ எண்டு யோசிக்கினமில்லை.

இந்த நிலையில, பூநகரிப் பிரதேசசபை, இந்த லைற்றுகளுக்கு கறண்ட் குடுத்து, ஒரு கொன்வேட்டரும் போட்டால் பழையபடி அந்த றோட்டை வெளிச்சமாக்கலாம் எண்டு ஐடியா குடுத்திருக்கினம். அதுக்கு முதல்ல மின்சாரசபைக்காரரும் இன்னும் ஒரு முந்நூறு மீற்றருக்கு போஸ்ட்போட்டு கறண்டைக் குடுக்கோணும். மிச்சவேலையளுக்கும் காசு குடுக்க பிரதேசசபை ரெடி. கொஞ்சக்காசோட இந்த வேலையை வடிவா முடிக்கலாமாம். ஆனால் மின்சாரசபையும், வீதி அபிவிருத்தி அதிகார சபையும் இந்த நல்ல ஐடியாவைக் கூட கணக்கில எடுக்கேலை. சிலவேளை கொஞ்சக்காசோட வேலையை முடிக்கலாம் எண்டதால தங்களுக்கு 'வெட்டுக் கொத்து' ஒண்டுமில்லையெண்டும் அவை நினைக்கினமோ தெரியேலை.

அந்த றோட்டில ஒரு பிள்ளையார் சிலைவைச் சதுக்கு பொங்கியெழுந்து, கோர்ட்டில கேசெல்லாம் போடத்தெரிஞ்ச வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு 106 லைற்றுகள் பழுதாப்போய், சனம் சங்குப்பிட்டி றோட்டில போய்வர ஏலாமல் அந்தரப்படேக்க மட்டும் வந்து பார்த்து வேலை செய்யத் தெரியேலை எண்டால் பருங்கோவன்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி : புதுவருடப் பலன்கள்






சந்தர்ப்ப சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் காய் நகர்த்தி காரியத்தை கச்சிதமாக முடிப்பவர்களே! உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டில் சூரியன் பலம் பெற்று அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் மனோபலம் கூடும். அரசால் அனுகூலம் உண்டாகும். ஆதரவு பெருகும். இழுபறியாக இருந்த வேலைகள் முடிவடையும்.

இந்தப் புத்தாண்டு உங்களின் 5 ஆம் வீட்டில் பிறப்பதால் அடிப்படைவசதிகள் உயரும். முயற்சிகள் சாதகமாக முடியும். புதிய பொறுப்புகள், பதவிகள் வர வாய்ப்பு உள்ளது.

இந்தாண்டு முழுக்க ராசிக்குள் சனி அமர்ந்து ஜென்மச் சனியாகத் தொடர்வதால் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுங்கள். தினசரி நடைப்பயிற்சி மேற்கொள்வது நல்லது.

30.04.2024 வரை குருபகவான் உங்களுடைய ராசிக்கு 3ஆம் வீட்டில் நிற்பதால் எந்தவொரு வேலையையும் முதல் முயற்சியிலேயே முடிக்க முடியாமல் இரண்டு, மூன்று முறை போராடி முடிக்கவேண்டிய சூழ்நிலை உருவாகும்.

01.05.2024 முதல் குரு ராசிக்கு 4இல் நுழைவதால் எதையும் திட்டமிட்டு செய்யப் பாருங்கள். அலட்சியம் வேண்டாம்.

இந்தாண்டு முழுக்க நிழல் கிரகங்களான ராகு 2 ஆம் வீட்டிலும் கேது 8ஆம் இடத்திலும் நீடிப்பதால் குடும்பத்தில் சலசலப்புகள் வரும். பார்வைக் கோளாறு வரக்கூடும்.

வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க அதிகம் உழைக்க வேண்டி வரும். திடீர் இலாபம் உண்டு. உத்தியோகத்தில் எவ்வளவுதான் உழைத்தாலும் ஓர் அங்கீகாரமோ, பாராட்டுகளோ இல்லையே என ஆதங்கப்படுவீர்கள். இந்தப் புத்தாண்டு ஆரோக்கிய குறைவையும், காரியத் தடங்கல்களையும் தந்தாலும் தொடர் முயற்சியால் இலக்கை எட்டிப் பிடிக்க வைப்பதாக அமையும்.

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதற்கு உகந்தநாள். சிலருக்கு திடீர்ப் பணவரவு மகிழ்ச்சி தரும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகாலட்சுமியை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்..

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். செலவுகள் ஏற்படக்கூடும். விநாயகரை வழிபடுவது நலம் சேர்க்கும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியைத் தவிர்க்கவும். உடல் அசதி உண்டாகும். முருகப்பெருமானை வழிபடுவது நலம் தரும். மனச்சோர்வு நீங்கும்.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. துர்க்கையை வழிபடுவதன் மூலம் சிரமங்கள் குறையும். மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக்கூடும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். சங்கடங்கள் ஏற்படலாம். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். துணிச்சலாக முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டிவரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சக வியாபாரிகளால் அனுகூலம் உண்டாகும். ஆஞ்சநேயரை வழிபட காரியங்கள் அனுகூலமாகும்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். வீண் அலைச்சலுடன், செலவுகளும் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும். காரியம் சாதகமாக முடியும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சுபச்செய்தி கிடைக்கும். காரியத்தடைகள் விலகும்.

## ‘வடந்தை’ நூலுக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 29

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவசாய அமைச்சால் வடக்கு மாகாண பண்பாட்டம்சங்களை உள்ளடக்கி வருடந்தோறும் வெளியிடப்படும் ‘வடந்தை’ நூலுக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

அனுப்பப்படும் ஆக்கங்கள் அனைத்தும் வடக்கு மாகாணம் சார்ந்ததாக அரசியல் கலப்பற்றதாக இருக்கவேண்டும். தனிப்பட்ட நபரைப் பாதிக்காத கருத்துகள் முன்வைக்கப்படல்வேண்டும். ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே சமர்ப்பிக்கமுடியும். ஆக்கமானது அவரவர் சொந்த ஆக்கமாக இருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். முன்னர் எந்தப் பத்திரிகைகளிலோ, சஞ்சிகைகளிலோ பிரசுரிக்கப்படாத ஆக்கங்களாக இருத்தல் வேண்டும்.

கணினி தட்டச்சு செய்யப்பட்டு எழுத்துரு 12 அளவில் 4 அல்லது 6 ஏ-4 தாள்களுக்கு மேற்படாமல் இருத்தல்வேண்டும்.

‘ஈழத்து நாட்டார் வழக்காற்றியல்’ எனும் பிரதான தலைப்பின் கீழ், ‘பிரதேச ரீதியான உணவுப்பழக்கவழக்கங்கள்’, ‘பாரம்பரிய விளையாட்டுகள்’, ‘கிராமிய வழிபாட்டு முறைகள்’, ‘பாரம்பரிய சடங்குமுறைகள்’ ஆகிய தலைப்புகளில் கட்டுரை இடம்பெற வேண்டும்.

குறித்த மென்பிரதி ஆக்கத்தை எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் ‘பிரதிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வியமைச்சு, செம்மணி வீதி நல்லூர்’ என்ற முகவரிக்கோ அல்லது npc.culture@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)



## மனித வடிவில் பிறந்த ஆட்டுக்குட்டி

யாழ்ப்பாணம், ஏப். 28

மனித உடலை ஒத்த ஆட்டுக்குட்டியொன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இலங்கையில் பிறந்துள்ளது. தெனியாய, விஹாரஹேன செல்வகந்த பிரதேசத்தில் வீடொன்றில் வளர்க்கப்பட்ட ஆடொன்றே இந்தக் குட்டியை ஈன்றுள்ளது.

எனினும் இந்த ஆட்டுக்குட்டி பிறந்த சில நிமிடங்களிலேயே உயிரிழந்துவிட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-555)



## கொக்குவில் இந்து கரத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ்ப்பாணம் கல்வி வலயமட்டத்துக்கிடையிலான கரம் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி 20 வயதுப் பெண்கள் பிரிவில் முதலிடத்தைப் பெற்று சம்பியனைத் தனதாக்கியுள்ளது. 20 வயது ஆண்கள் பிரிவில் இரண்டாமிடத்தையும், 17 வயது ஆண்கள் பிரிவில் மூன்றாம் இடத்தையும் பெற்று கொக்குவில் இந்துக் கல்லூரி சாதித்துள்ளது. (ச-555)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# கல்விசார் கட்டமைப்புகளில் தலைமுறை இடைவெளி ஏன்?


நாட்டுக்குப் பொருத்தமான கல்விமுறையொன்று ஏற்படுத்தப்படுவது அவசியம். ஆதலால், தேவையற்ற அரசியல் அழுத்தங்களைத் தவிர்த்துவிட்டு இணையத் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவை மையப்படுத்திய கல்வியை வளர்த்தெடுக்க அனைவரும் ஓரணியில் ஒன்றுபடவேண்டும் என்பதாக வலியுறுத்தியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில்.

உலகளவில் இந்தத் தசாப்தத்தில் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற அநேக கண்டுபிடிப்புகள் போருக்கானவையோ அல்லது வணிக நோக்கத்துக்கானவையோ அல்ல. மாறாக கல்விக்கானவையாகவே இருக்கின்றன. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு செயற்கை நுண்ணறிவு இந்தத் தசாப்தத்தில் அபரிமிதமான வளர்ச்சியைக் காட்டிவரும் பின்னணியில், உலகநாடுகள் அனைத்தும் தங்களின் கல்விக் கட்டமைப்பை மறுபரிசீலனைக்கும் - திட்டமிடலுக்கும் -கட்டமைப்புக்கும் உட்படுத்தி வருகின்றன. உலகின் மிகச்சிறந்த கல்விக்கொள்கையைக் கொண்ட ஸ்கன்டிநேவிய நாடுகள்கூட அடுத்தகட்டத்துக்குப் பயணப்படுவதற்காக பல மில்லியன் டொலரை ஒதுக்கியுள்ள பின்னணியில், இலங்கை இன்னமும் மூன்றாம் தலைமுறைக் கல்விக்குள் தன்னை மட்டுப்படுத்தி வைத்திருப்பது அபத்தமானது. ஆதலால், ஜனாதிபதி ரணிலின் கருத்துகளும் வலியுறுத்தல்களும் சரியானவையே.

ஆனால், 'எல்லாமாடும் ஓடுதெண்டு கந்தையரின் பேத்தைக்கண்டும் ஓடிய கதையாக' இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆகிவிடக்கூடாது என்ற தெளிவையும் -புரிதலையும் இலங்கையின் ஆட்சியாளர்கள் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை மிக இலகுவாக ஒரேயொரு பாடத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் மத்தியில் கொண்டுசென்று சேர்ப்பிப்பதற்கு அமெரிக்காவாலும், கனடாவாலும், ஐரோப்பிய தேசங்களாலும், ஸ்கன்டிநேவிய நாடுகளாலும் முடிகின்றதென்றால், அங்கே செயற்கை நுண்ணறிவைக் கற்பிப்பதற்கான அடித்தளம் பலமாக ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதே பொருள். கல்விக் கட்டமைப்பில் சமச்சீரான வளப்பங்கீடு உடைய அந்த நாடுகளில் மேற்கொள்ளப்படும் 'உச்ச நவீனத்துவ' மாற்றங்களை அனைத்து மாணவர்களும் சிரமமின்றி மிக இலகுவாக உள்வாங்கக்கூடியதும் ஏனைய மாணவர்களுடன் இணைந்து கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடியதுமான தளம் அங்குள்ளது. ஆனால் இலங்கையில்....?

இலங்கையைப் பொறுத்தவரை தலைநகர் கொழும்பில் உள்ள மாணவர்கள் ஒருவிதமான வளப்பலத்தைக் கொண்டிருக்கின்றனர். முல்லைத்தீவு, கிளிநொச்சியில் உள்ளமாணவர்கள் இன்னொருவிதமான வளப்பலத்தைக் கொண்டிருக்கின்றனர். மலையக மாணவர்களின் கதையோ வேறுவிதமாக உள்ளது. இவ்வாறிருக்கையில் செயற்கை நுண்ணறிவையும், இலத்திரனியல் தொழில்நுட்பத்தையும் மையப்படுத்திய இந்தக் கல்வியை நாட்டில் உள்ள அனைத்து மாணவர்களும் எவ்வாறு ஏற்றத்தாழ்வின்றிக் கற்றுக்கொள்வார்கள்? ஜனாதிபதி ரணில் வலியுறுத்தும் மாற்றம் மிக அவசியமும் தவிர்க்கப்பட முடியாததும்தான். ஆனால், அந்த மாற்றத்தின் வெற்றியைத் தீர்மானிக்கக்கூடிய வளப்பங்கீட்டையும் அதன் உறுதிப்பாட்டையும்தான் முதலில் சரிசெய்து கொள்ளவேண்டும்.

இலங்கைத் தீவின் 30க்கும் குறையாத வருடங்களை உள்நாட்டுப் போர் விழுங்கியபோதிலும் எழுத்தறிவிலும் படிப்பறிவிலும் இலங்கையர்கள் ஆசியப் பிராந்தியத்திலேயே உயர்சராசரியுடன் தனித்து நின்ற காலமொன்று இருந்தது. மழைக்குப் பின்னரான தூவானம்போன்று இன்றுவரை அந்தப் பெருமை எம்மைத் தொடர்கின்றபோதிலும், இந்தக் கற்றறிவு வீதமும் அதுசார் பெருமைகளும் இனிவரும் காலத்தில் இதேபோன்று பேணப்படுமா...?




# போராட்டத்தில் குதிக்கவுள்ள பல்கலை கல்விசாரா ஊழியர்

கொழும்பு, ஏப். 29

**அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் தொடர்ச்சியான தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழகத் தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த குழு தெரிவித்துள்ளது.**

மே மாதம் இரண்டாம் திகதி இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

சம்பளப் பிரச்சினையை நிவர்த்தி செய்யக் கோரி கடந்த காலங்களில் பல்வேறு கோரிக்கைகள் அரசாங்கத்துக்கு எம்மால் முன்வைக்கப்பட்டன. இதுவரை தீர்வு கிடைக்கவில்லை. அதற்கமைய தொடர்ச்சியான தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட தயாராகியுள்ளோம் என்றும் அதன் இணைத் தலைவர் தம்மிக்க எஸ். பிரியந்த தெரிவித்தார். (ச-இ)

## சம்பள முரண்பாடு; நிவர்த்திக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 29

கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாடு மற்றும் பிரச்சினைகளை நீக்குவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் அமைச்சரவை உபகுழுவிடம் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு முதல் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வெற்றிகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாததன் காரணமாக அரச பல்கலைக்கழக அமைப்பில் தொழில்சார் பிரச்சினை உருவாகியுள்ளது. இது தொடர்பான இரண்டு அமைச்சரவைப் பத்திரங்கள் எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதி அமைச்சரவை உபகுழுவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

## எகிப்திலிருந்து பெ.வெங்காயம்

கொழும்பு, ஏப்.29

எகிப்திலிருந்து பெரியவெங்காயத்தை இறக்குமதி செய்வதற்கு ஆதரவளிக்கத் தயார் என்று எகிப்திய தூதுவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவுடன் மேற்கொண்ட கலந்துரையாடலில் அவர் இதனைக் குறிப்பிடார்.

மேலும் இரு நாடுகளுக்குமிடையில் தற்போதுள்ள முதலீடு மற்றும் வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு எடுக்கப்படக்கூடிய் நிலையான நடவடிக்கைகள் என்பன குறித்தும் கலந்துரையாடப்பட்டன. (ச-இ)

## ஆயுள்வேத மருந்து: நாட்டில் தட்டுப்பாடு

கொழும்பு, ஏப். 29

ஆயுள்வேத மருந்துகளை தயாரிப்பதற்கான மூலப் பொருள்களுக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று ஆயுள்வேத திணைக்களம் தெரிவித்துள்ளது.

டொலர் தட்டுப்பாட்டின் காரணமாக மூலப்பொருள்களை இறக்குமதி செய்வதற்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

அதற்கமைய 137 அத்தியாவசிய மருந்துகளைத் தயாரிப்பதற்கு தடைகள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



## 7 நாடுகளுக்கு இலவச விசா!

கொழும்பு, ஏப். 29

இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக 7 நாடுகளுக்கு இலவச விசா வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தியா, இந்தோனேஷியா, ரஷ்யா, சீனா, தாய்லாந்து உள்ளிட்ட 7 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச விசா வழங்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

**நாளை**

30.04.2024

**செவ்வாய்க்கிழமை**

**சித்திரை - 17**

சுபநேரம் : 10.28 - 11.58

ராகுகாலம் : 02.58 - 04.28

**நாளொரு நல்வார்த்தை**

**நீங்கள் ஒரு புதிய விஷயத்தை செய்யும்போது மற்றவர்கள் உங்களை கிண்டல் செய்வார்கள். அதற்கு நீங்கள் தயாராக இருக்கவேண்டும்.**

**-லாரி எல்லீஸன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனின் மின்கட்டமைப்பில் ரஷ்யா சரமாரித் தாக்குதல்

மொஸ்கோ, ஏப். 29

உக்ரைனின் மின்கட்டமைப்புமீது ரஷ்யா சரமாரித் தாக்குதல்களை நடத்தியுள்ளது என்று உக்ரைனின் இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் ரஷ்யாவின் எல்லைப்புற நகரங்கள் மீது உக்ரைன் 65க்கும் மேற்பட்ட ஆளில்லா ட்ரோன்களை ஏவியது. இந்த ட்ரோன்களை இடைமறித்து அழித்ததாக ரஷ்ய இராணுவம் தெரிவித்தது.

உக்ரைன் மேற்கொண்ட இந்தத் தாக்குதல் முயற்சிக்குப் பதிலடியாகவே, உக்ரைனின் மின்கட்டமைப்புகள் மீது 30க்கும் மேற்பட்ட ஏவுகணைகளால் ரஷ்யா நேற்று சரமாரித் தாக்குதல் நடத்தியுள்ளது. (ம)



## மாலைதீவில் சீனக்கப்பல்!

மாலைதீவின் ஜனாதிபதியாக சீன ஆதரவாளரான மொகமட் மொய்சு தெரிவானதையடுத்து, மாலைதீவுக்குள் சீனாவின் உளவுக் கப்பல் நங்கூரமிட்டுள்ளது. இது இந்தியா மற்றும் மாலைதீவிடையே பிராந்தியப் பதற்றத்தை அதிகரித்துள்ளது. (ம)



# ரஷ்யாவை ஆதரித்தால் சீனா மீது நடவடிக்கை!

அமெரிக்கா எச்சரிக்கை

வொஷிங்டன், ஏப். 29

**உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவுக்கு வழங்கும் ஆதரவுக்காக சீனாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்ரனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.**

ரஷ்யாவுக்கு சீனா வழங்கிவரும் ஒத்துழைப்பால் ஐரோப்பாவின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. பனிப்போருக்குப் பின்னர் இத்தகைய ஆபத்தான நிலை தோற்றம் பெற்றுள்ளது என்று அன்ரனி பிளிங்கன் மேலும் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான மோதலில் மட்டுமல்ல, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மோதலிலும் ஈரானுக்கு சீனா உதவிகளை வழங்கி வருகின்றது. தென்சீனக் கடற்பகுதியிலும், தாய்வான் விவகாரத்திலும் சீனாவுக்கு எதிராக தீவிரமான முடிவுகளை அமெரிக்கா எடுத்துள்ளது. ஆதலால், அமெரிக்காமற்றும் சீனா இடையிலான உறவு கடந்த சில வருடங்களாகவே மிகவும் பின்னடைவுக்குள் தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# எண்ணெய்க் கப்பலை தாக்கியது ஹவுத்தி

இந்தியாவையும் பகைக்கிறதா?

மொஸ்கோ, ஏப். 29

ரஷ்யாவிலிருந்து இந்தியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த எண்ணெய்க் கப்பல்மீது ஹவுத்தி போராளிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

காஸாவில் இஸ்ரேல் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகள் கைவிடப்படவேண்டும் என்றும் இல்லாவிடில் சர்வதேச கடற்பரப்புகளில் ஊடுருவி கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என்றும் ஹவுத்தி அமைப்பு முன்னதாக எச்சரித்திருந்தது. இதற்கேற்ப தொடர் தாக்குதல்களையும் ஹவுத்தி அமைப்பு நடத்தியது. ஹவுத்தியின் தாக்குதல்களின் இருந்து கப்பல்களைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் இணைத்தலைமையில் இராணுவக் கூட்டணி உருவாக்கப்பட்டபோதிலும் எதுவும் பயனளிக்கவில்லை. தற்போது ராபாவில் இஸ்ரேல் தன் தாக்குதல்களைத் தீவிரப்படுத்த முனைந்துவரும் பின்னணியிலேயே ரஷ்யாவில் இருந்து இந்தியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த எண்ணெய்க் கப்பல் ஹவுத்தியால் தாக்கப்பட்டுள்ளது.


சர்வதேசக் கப்பல்களுக்கு எதிரான போர் அறிவிப்பை ஹவுத்தி மேற்கொண்ட போதிலும், ரஷ்யா மற்றும் இந்தியா போன்ற நாடுகளைச் சீண்டுவதை அந்த அமைப்பு தவிர்த்தே வந்தது. இவ்வாறிருக்கையில் தற்போது நடத்தப்பட்டிருக்கும் இந்தத் தாக்குதல் பல அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அதேநேரம் ஹவுத்திதான் இந்தத் தாக்குதலை நடத்தியதா அல்லது ஹவுத்தியின் போர்வையில் வேறெந்தத் தரப்புகள் தாக்குதலின் பின்னணியில் உள்ளனவா? என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)



# ஸ்பெய்னின் பிரதமருக்காக வீதியில் இறங்கிய மக்கள்

மட்ரிட், ஏப். 29

ஸ்பெய்ன் பிரதமர் பெட்ரோ சான்செஸை பதவிவிலகவேண்டாம் என வலியுறுத்தி ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நாடுமுழுவதிலுமுள்ள, ஸ்பெய்ன் சோசலிஸ்ட் கட்சியின் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல் இந்தப் போராட்டத்தில் தீவிரம் காட்டி வருகின்றனர். (ம)





# இந்தியப் படைகளில் நவீன ஏவுகணைகள்!

புதுடில்லி, ஏப். 29

இந்திய இராணுவத்தால் அண்மையில் உருவாக்கப்பட்ட அதிசக்தி வாய்ந்த ராம்பேஜ் என்ற ஏவுகணைகள் அந்தநாட்டின் விமானப்படையிலும், கடற்படையிலும் இணைக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. அருணாச்சலம் பகுதியில் இந்தப் பதற்றநிலை தீவிரமாகியுள்ள நிலையில் இரண்டு நாடுகளும் அங்கு தீவிர படைக்குவிப்பில் ஈடுபட்டு வருகின்றன. இவ்வாறான பின்னணியிலேயே, ராம்பேஜ் என்ற ஏவுகணையை இந்தியா தனது விமானப்படையிலும் கடற்படையிலும் இணைந்துள்ளது. இதை சீனாவுக்கு எதிரான நகர்வு என்று போர்த் தந்திரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ராம்பேஜ் ஏவுகணையானது, 250 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் இலக்கைக்கூட துல்லியமாகத் தாக்கக்கூடிய திறன் கொண்டது. அத்தோடு, இது ஒலியை விடவும் இரண்டு மடங்கு வேகத்தில் பயணித்து இலக்கைத் தாக்கும் எனக் கூறப்படுகிறது. (ம)

# பா.ஜ.க. எதிர்பார்த்த வாக்குகள் இல்லை!

அகிலேஷ் யாதவ் தெரிவிப்பு

இந்திய மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வினர் எதிர்பார்த்த அளவுக்கு வாக்குகள் கிடைக்கவில்லை என்று உத்தரப் பிரதேச முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவ் கருத்துத் தெரிவித்துள்ளார். இந்திய மக்களவைத் தேர்தல் தற்போது கட்டம்கட்டமாக இடம்பெற்று வருகின்றது. இரண்டு கட்ட வாக்குப்பதிவுகள் முடிவடைந்துள்ள நிலையில், முஸ்லிம்களுக்கு எதிரான தீவிரமான பரப்புரைகளை பா.ஜ.க. அப்பட்டமாகக் கையிலெடுத்துள்ளது. இதற்கு, தோல்வி பயமே காரணம் என்று விமர்சிக்கப்படும் நிலையிலேயே, பா.ஜ.க.வினர் எதிர்பார்த்த வாக்குகள் கிடைக்கவில்லை என்று அகிலேஷ் யாதவ் தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம், முல்லைத்தீவு
## பதவி வெற்றிடங்களிற்கான விண்ணப்பங்கள் கோரல்

கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கத்தில் வெற்றிடமான பின்வரும் பதவிகளிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தினை ரூபா 20/- செலுத்தி பெற்று பூரணப்படுத்தி அத்துடன் பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிட்டு எதிர்வரும் 15.05.2024ம் திகதிக்கு முன்னராக தலைவர், கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

வயதெல்லை 18தொடக்கம் 45வரை (சங்கபணியாளர்களிற்கு வயதெல்லை பொருந்தாது)

முல்லைத்தீவுமாவட்டத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.

சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும். வேறு கூட்டுறவுச் சங்கங்களிட மிருந்து விண்ணப்பிப்பவர்கள் தாங்கள் கடமையாற்றும் சங்கம் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

அத்துடன் எவரேனும் ஒருவர் கூட்டுறவுச் சங்கத்தில் சேவையாற்றுகின்ற அதே வேளையில் நேரடியாக விண்ணபத்தினை சமர்ப்பித்துள்ளார் என அவர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னரேனும் தெரியவருமாயின் பதவிஇழப்பதற்கு அது ஒரு காரணமாக அமையும்.

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபஇலக்கங்கள் 04/2017(1), 04/2018(1)ற்கு அமைய வாழ்க்கைச் செலவுப்படியும். விசேட செயலாற்றுகைப்படியும் வழங்கப்படும்.

இப்பதவிகட்கு விண்ணப்பங்கள் செய்யும் விண்ணப்பதாரர்கள் தெரிவுசெய்யப்படுமிடத்து சங்கத்தில் பிணை செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

**திரு.கு.விக்ரர் ஜெயசிங்கம்**
**தலைவர்,**
**கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம் - முல்லைத்தீவு.** **திகதி:- 27.04.2024**

**பதவி :- பொதுமுகாமையாளர்**
சம்பள குறியீட்டு இல :- 101/08
சம்பள அளவுத்திட்டம் :- 20665.00 - 260x10-280x10 – 26065.00
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றநிருபங்களான 01/2022, 01/2024,04/2024ற்கு அமைய மாதாந்தம் ரூபா 15000/- மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்:**

அ) கூட்டுறவு ஊழியர் 9ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை / மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்

கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம் / அதற்குச் சமமான தகைமை. இத் தகைமையானது கணக்கியல்/ வியாபாரப் புள்ளி விபரவியல் / வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/ முகாமைத்துவம் / வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

**அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

க.பொ.த உயர் தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்

**பதவி :- கிளை முகாமையாளர்**
சம்பள குறியீட்டு இல :- 208/13
சம்பள அளவுத்திட்டம் :- 18360.00 - 160x10-170x10 – 21660.00
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றநிருபங்களான 01/2022, 01/2024, 04/2024ற்கு அமைய மாதாந்தம் ரூபா 15000/- மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்:**

அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்

கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி க.பொ.த. சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ் உட்பட 3 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

**பதவி :- கிளை முகாமையாளர்**
சம்பள குறியீட்டு இல :- 208/14
சம்பள அளவுத்திட்டம் :- 17900.00 - 155x10-165x10 – 21100.00
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றநிருபங்களான 01/2022, 01/2024, 04/2024 ற்கு அமைய மாதாந்தம் ரூபா 15000/- மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்:**

அ) கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திர் பரீட்சையில் சித்தி

க.பொ.த.சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

**பதவி :- கிளை முகாமையாளர்**
சம்பள குறியீட்டு இல :- 208/15
சம்பள அளவுத்திட்டம் :- 17435.00 - 145x10-160x10 – 20485.00
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றநிருபங்களான 01/2022,01/2024,04/2024ற்கு அமைய மாதாந்தம் ரூபா 15000/- மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்:**

அ) கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த. சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.


# இறுதிக் கருத்தரங்கு!

யாழ்., ஏப். 29

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் சார்பில் வருடாந்தம் நடத்தப்படும் கிறிஸ்தவ பாட க.பொ.த. சாதாரண பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் உதவிக் கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு அருகாமையில் உள்ள றிமர் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (ஒ-இ)


## சேவைநலன் பாராட்டு




எமது பாடசாலையின் பழைய மாணவியும் **இந்து சமயம் இந்துநாகரிகம், கற்பிக்கும் ஆசிரியராகவும்** அரும்பெரும் பணியாற்றி இன்று **(29.04.2024)** திங்கட்கிழமை ஓய்வுபெற்றுச் செல்லும்

### திருமதி சுதமதி நடராசா
(BA Hons, PGDE, MED, MA
சைவசித்தாந்த பண்டிதர், இந்து தர்மாசிரியர்)

அவர்களது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**
- 1993.01.11 - 1994.12.31 - யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்
- 1995.01.02 - 2015.02.18 - யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி
- 2015.02.19 - 2018.04.24 - யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
- 2018.04.25 - 2024.04.29 - யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்

(cs.50584) (N-1)

**வாழ்த்துவோர்:**
**யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், மட்டுவில்.**



## கேள்வி அறிவித்தல்
## வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம்
**பதிவு இல.** HA/05/JA/1180

### வருடாந்த அலங்கார உற்சவம் - 2024

**வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும்**
**20.05.2024 திங்கட்கிழமை பொங்கல்**
**உற்சவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து**
**14 நாட்கள் திருவிழா இடம்பெறும்.**

- 20.05.2024 திங்கட்கிழமை பொங்கல் (1 ம் திருவிழா)
- 27.05.2024 திங்கட்கிழமை வேட்டைத் திருவிழா
- 01.06.2024 சனிக்கிழமை தேர்த்திருவிழா
- 02.06.2024 ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழா

உற்சவ காலத்தில் சேவைகள் மற்றும் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்வோருக்கான கேள்வி கோரப்படுகின்றது.

1) ஒளியமைப்பு மற்றும் இணைந்த சேவைகள்
2) தகரப்பந்தல் மற்றும் இணைந்த சேவைகள்
3) தற்காலிக கடைகள் அமைத்தல்

மேற்படி கேள்வி கோரல்கள் அனைத்தும் ஆலய முன்றலில் அமைந்துள்ள கருமபீடத்தில் குறிப்பிட்ட திகதியில் கேள்விப் படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அன்றைய தினமே கேள்வி முடிவுகள் அறிவிக்கப்படும்.

- ஒளியமைப்பு, தகரப்பந்தல் சேவைகளுக்கான கேள்வித் திகதி 08.05.2024 புதன்கிழமை பிற்பகல் 3.30 மணி
- தற்காலிக கடைகளுக்கான கேள்வித்திகதி 14.05.2024 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணி

கேள்வி கோரலுக்கு தேவையான தேசிய அடையாள அட்டை மற்றும் ஆவணங்களுடன் குறித்த நேரத்திற்கு சமுகமளிக்கவும்

மேலதிக விபரங்களுக்கு - **076 308 1048 (பொருளாளர்)**

**ஆலய பரிபாலன சபை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈஸ்டர் சூத்திரதாரிகளை உடனே தூக்கிலிடுங்கள்

## பொன்சேகா ஆவேசம்

**கொழும்பு, ஏப். 29**


**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குக் காரணமானவர்களை தூக்கிலிடுங்கள் என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சில மாதங்களுக்கு முன்னர் விபத்து ஒன்றுக்கு காரணமாயிருந்த சாரதிக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைத் தடுக்கத்தவறியவர்களுக்கு தண்டம் விதிக்கப்படுகிறது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்ற வேளையில் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்தவர் ஒரு திறமையற்றவர். ஒழிக்கப்பட்ட பயங்கரவாதம் வீறு கொண்டு எழுந்தது. இப்போது தேசிய பாதுகாப்புக்கு பொறுப்பாக இருப்பவரும் திறமையற்ற ஒருவர்தான். இவர் பாதுகாப்புக்குழுக் கூட்டங்களை ஒழுங்காக கூட்டுவதில்லை. அத்துடன் பாதுகாப்புச் செயலர், பொலிஸ்மா அதிபர், பிரதமர் ஆகியோர் பாதுகாப்புக்குழுக் கூட்டங்களுக்கு அழைக்கப்படுவதில்லை. அரச புலனாய்வுப்பிரிவுப் பிரதானி தாக்குதல் தொடர்பான தகவல் கிடைத்த போது அப்போதைய ஜனாதிபதியுடன் தொடர்பு கொள்வதற்கு இரு தடவைகள் முயன்ற போதும் ஜனாதிபதியின் தொடர்பு கிடைக்கவில்லை எனக்கூறப்படுகிறது. என்னால் இதை நம்பமுடியாது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணை ஒப்படைக்கப்பட்டால் அடிமட்டம் வரை சென்று உண்மைகளைக் கண்டறிவேன் - என்றார். (அ-ஒ-6)

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய முன்னாள்
பிரதமகுரு
**பிரம்மஸ்ரீ.க.மு.ஐயாத்துரைக் குருக்கள்** அவர்களின் அன்பு
மகன்
**ஐ.அரிகரக்குருக்கள்**
அவர்கள் கனடாவில்
காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவர்தம் குடும்பத்தாருக்குத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா கற்பக விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணியப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 29.09.1979 — மறைவு 26.04.2024

**பரிபாலன சபை,**
**ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்,**
**உரும்பிராய்.**

(CS 00360) S-1

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-14. கன்னாதிட்டி வீதி. 144 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் D.கோபாலசாமி பத்தர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம். கன்னாதிட்டி றோட் 51ம் இலக்கத்தைச் சேர்ந்த துரையப்பா பத்தர் கோபாலசாமியும் பெண் பொன்னம்மாவும் 31.05.2010ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு வை.த.சிவலிங்கம் முகதாவில் 1187ம் இலக்கத்தில் நன்கொடை உறுதி மூலம் தங்களது மகளான அதே இடத்தைச் சேர்ந்த செல்லத்தம்பி செல்வகலியுகவரதன் பெண் சுபத்ராவுக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் 1937ம் ஆண்டு சித்திரை மாதம் 1ம் திகதி பிரசித்த நொத்தாரிசு கே.எஸ்.வீரவாகு முகதாவில் 22604ம் இலக்கத்தில் முடிந்த நன்கொடை உறுதிப்படி துரையப்பா பத்தர் கோபாலசாமியும் பெண் பொன்னம்மாவுக்கும் வந்தடைந்த சொந்தமும் ஆட்சியுமானது.

ஆதன அட்டவணை

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி. வண்ணார் பண்ணைக் கோயில்பற்று வண்ணார்பண்ணை வடகி ழக்கு இறை "தட்டான் தறை நில.பர.2 குளி 3/4. ஆனால் இது 1986.05.30ல் நில அளவையாளர் அ. சந்தியாப்பிள்ளை அளந்து தயா ரித்த 1122ம் இலக்கப்படத்தின்படி துண்டு 1. துண்டு 2 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு 1 குளி 16.93. இதில் ஏற்கனவே கொடுத்த துண்டு 2 என அடை யாளமிடப்பட்ட நில.பர.00 குளி 10.78 உம் வீடும் மேற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் அரைவாசியும் இதனுள் இருக்கும் இரு கடைக்கட்டடங்களும்.

இந்த நிலப்பரப்பு 00 குளி 10.78 க்கும் எல்லைகள்.

கிழக்கு :- கிருஷ்ணசாமி ஸ்ரீராம் பெண் நிர்மலாவுக்குரிய ஆதனம்
வடக்கு :- கன்னாதிட்டி றோட்
மேற்கும் :- கோபாலச் செட்டியாரினதும் கதிர்ராமன் செட்டியாரினதும் உரித்தாளரின் ஆதனம்.
தெற்கும் :- இதடாங்கலும். இதன்வரிமதிப்பீட்டு இலக்கம் 142.144 கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம்.

தற்போது செல்லத்தம்பி செல்வகலியுகவரதன் பெண் சுபத்ரா இவ்வாதனத்தை தாம் நியமித்த அற்றோனித் தத்துவக்காரர் திரு.கிருஸ்ணமூர்த்தி புஸ்பநாதன் மூலம் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்
ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது செல்லத்தம்பி செல்வகலியுகவரதன் பெண் சுபத்ரா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆணையாளர்,**
**யாழ் மாநகர சபை.**

# வியாழமாற்ற ஹோமம்

யாழ்ப்பாணம்,ஏப்.29

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் வியாழ மாற்றத்தை முன்னிட்டு நாளை மறுதினம் முதலாம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் விசேட அபிஷேகம், ஹோமம் பூஜை ஆகியன நடைபெறவுள்ளன. (ஒ)

## Vacancies at Northern Central Hospital

We Northern Central Hospital the leading private healthcare provider in Northern Province, Sri Lanka are currently seeking experienced and self-motivated individuals to join our team.

**MEDICAL OFFICER – cadre for contract basis**


Requirements:

- MBBS with SLMC registration.
- Possess good public relations skills.
- Retired medical officers are encouraged to apply.
- Medical officers with experience in critical care unit will be an added advantage.
- Registered medical practitioners (RMP) also can apply.

Email ID: jnthabitha@gmail.com , WhatsApp: 0776098867

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 01 . 1928



மறைவு 27 . 04 . 2024

## வேலுப்பிள்ளை மார்க்கண்டு

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், கல்லூரி வீதி, காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் தற்போது கனடா. உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மார்க்கண்டு அவர்கள் நேற்று முன்தினம் (27.04.2024) சனிக்கிழமை உரும்பிராயில் காலமானார்.

அன்னார் ஏழாலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியரின் மகனும், காங்கேசன்துறையைச் சேர்ந்த சோதிமயிலின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்புக் கணவரும், வேலாயுதபிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (ஆசிரியர்), தங்கத்துரை (உதவி அரசாங்க அதிபர், நுவரெலியா), இராஜதுரை (லிகிதர்) மற்றும் திருமதி.திலகவதி கந்தசாமியின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நாகராஜா, நாகபூசணி மற்றும் கமலாதேவி, விமலாதேவி, வசந்தாதேவி, நவயுவநாதன், நவரட்ணராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிறீதரன் (உரும்பிராய்), நிர்மலன் (கனடா), முரளிதரன் (கனடா), பகீரதன் (நோர்வே), சோபனா (U.S.A) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரி மனோகரி (ஓய்வு பெற்ற ஆசிரியர், வயாவிளான் மத்திய கல்லூரி), ராஜசுகுணா, ஜெயந்தினி, அமிர்தினி, ஸ்ரீதர் ஆகியோரின் அன்பு மாமனாரும், சரண்ஜன், பிருந்தினி, தனஞ்சயன் - பானுமதி (U.K), காருண்ஜன், துஷாந் - நிவேதிகா, புருஷோத், பிரவீண் (கனடா), ஜெனனி, ஜெசிக்கா (கனடா), சஞ்சய், ஸ்ரயா (U.S.A), ரிதன், கவின் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2024) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் உரும்பிராய் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலையில் உள்ள கடா கரம்பை மயானத்திற்கு இறுதிக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கற்பகம் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 223 0588**

(CS 00359) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையினரின் ஏற்பாட்டில், 'ஞானச்சுடர் சஞ்சிகையின் 316 ஆவது இதழ் வெளியீட்டு நிகழ்வு, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு இடம்பெற்றது. (ப-66)



வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில், இளங்கோ அடிகளாரின் நினைவுதினம் வவுனியா கோவில்குளம் சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள அவரது சிலையடியில் கடந்த செவ்வாய்க்கிழமை அனுஸ்டிக்கபட்டது. (எ-18-110)

பெண்களை வலுவூட்டும் அமைப்பின் ஏற்பாட்டில், பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் உற்பத்திப் பொருள்களுக்கு சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் அண்மையில் அரியாலை வட மேற்கு ஜே/91 கிராம அலுவலர் பிரிவில் நடைபெற்றது. மூத்த பிரஜைகள் சங்க தலைவர் இரா.மதிகரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பெண் முயற்சியாளர்களும் அரச உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (எ-159)





சித்திரைப் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு சித்திரைக் கஞ்சி காய்ச்சும் நிகழ்வு குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரம முன்றலில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (எ-66)



கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் உள்ள பங்கு ஆலயங்களுக்கு மடு அன்னையின் திருச்சொருபம் கொண்டுவரப்பட்டது. தருமபுரம் சவேரியர் ஆலயத்தில் மக்கள் ஆசிக்காக மடு அன்னையின் திருச்சொருபம் வைக்கப்பட்டது. (எ-113)



சித்திராப் பூரணை விரத தினத்தை முன்னிட்டு வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் அபிஷேகம், பூசை வழிபாடுகள் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நூற்றுக்க ணக்கான அன்பர்கள் தீர்த்த சங்கற்பம் செய்து கொண்டு வில்லூன்றிப் புனித தீர்த்தக் கேணியில் தீர்த்தமாடியதுடன் இறந்த தமது தாய்மாருக்காகச் பிதிர்த் தர்ப்பணங்களும் செய்து கொண்டனர். (எ66)

# மரண அறிவித்தல்

தோற்றம்
04
12
1947



மறைவு
28
04
2024

## மகேஸ்வரி மயில்வாகனம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி மயில்வாகனம் அவர்கள் நேற்று (28.04.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நா.மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், சதீஸ்குமார் (லண்டன்), சுபாஷினி (ஆசிரியர் -யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தினி (லண்டன்), காலஞ்சென்ற சண்முகராசா ஆகியோரின் மாமியாரும், யதுர்ஷன், ரிக்கேஷ், நிவேதா, துவாரகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சோமசேகரம் (லண்டன்), காலஞ்சென்ற யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயலக்சுமி, தங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

222 (80) மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 404 5499

(CS 363) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத் தேர்த் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ப-66)

நானாட்டான் டிலாசால் கல்லூரியின் 123 ஆவது ஆண்டு நினைவு கூரலும், பழைய மாணவர்களின் ஒன்றுகூடலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக நானாட்டான் பங்குத்தந்தை அருட்பணி சுரேந்திரன் ரெவ்வல் அடிகளார், கௌரவ விருந்தினர்களாக அருட் சகோதரர் செல்வதாஸ், மன்னார் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞானராஜ், விசேட விருந்தினர்களாக பாடசாலை அபிவிருத்திக்காகப் பணியாற்றிய ஆறு அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (எ-60)





குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு, கிராம ஊர்வலம் ஆலயத்திலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி கடந்த சனிக்கிழமை நிறைவடைந்தது. (ப-66)

வவுனியாவில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு, புத்தாண்டை முன்னிட்டு, இலவச அரிசிப்பொதி விநியோகிக்கும் நிகழ்வு, அட்மஸ்கட பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ப-110)






புதுக்குளம் சித்தி விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த கண்காட்சி நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வை வைபவ ரீதியாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் இ.மோர்சிபவன் ஆரம்பித்து வைத்தார். (எ-75)






மன்னார் மாவட்ட அறநெறி ஆசிரியர்களுக்கான திறனாய்வுப் பயிற்சிக் கருத்தமர்வு, மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. (ப)



மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களுக்கான முதலுதவிப் பயிற்சிப்பட்டறை நிகழ்வு, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரின் ஏற்பாட்டில், கல்லூரியின் பேஜ் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த பேராசிரியர் வேல்நம்பி கடமைகள் பொறுப்பேற்பு



யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடத்தின் புதிய பீடாதிபதியாக மூத்த பேராசிரியர் தி. வேல்நம்பி அண்மையில் நியமிக்கப்பட்ட நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தனது பிறந்தநாளில் உத்தியோகபூர்வமாகக் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். (அ-ஒ-66)

## தமிழர்களின்...

கிளிநொச்சி நாதன் குடியிருப்பு விளையாட்டு மைதானத்தில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை நேற்றுச் சந்தித்தபோதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காலத்துக்குக் காலம் ஜனாதிபதித் தேர்தலின்போது பல வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்கியபோதும் சிலர் வெற்றி பெற்றார்கள். எமக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. தமிழ் மக்களின் அரசியல் கொள்கைக்கு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் தேவை என்பது தனது தனிப்பட்ட கருத்து.

இங்கு பொதுவேட்பாளர் யார் என்பது முக்கியமல்ல. வடக்கிலும் கிழக்கிலும் வாழுகின்ற தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகள் பொதுவேட்பாளர் மூலம் உலகறியச்செய்யப்படவேண்டும். தமிழர்கள் தங்களது பாரம்பரிய பூமியில் இறைமையோடு வாழ்ந்தவர்கள். அவர்களுக்கு அவர்களது இறைமையை மீட்டுக்கொடுக்கும் வகையிலான சமஷ்டித் தீர்வை இந்தப் பொதுவேட்பாளர் முன்வைப்பார்.

தமிழர்களின் அரசியல் தீர்வுக்கான ஒரு களமாக நாங்கள் இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுவேட்பாளரை நிறுத்தி அவருக்கான ஆதரவைக்கேட்போம்.

எங்கள் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான ஒரு பெரு வாக்கெடுப்பாகவே பொதுவேட்பாளர் களமிறக்கப்படுவதைத் தமிழர்கள் பார்க்கின்றார்கள்.

தமிழர் ஒருவர் ஜனாதிபதியாக அல்ல, துணை ஜனாதிபதியாகக்கூடத் தெரிவு செய்யப்பட முடியாதென்பதை அறிந்தே தான் எல்லோரும் செயற்படுகின்றோம். இங்கு முக்கியமானது வெற்றியல்ல, தமிழர்கள் தங்களது அபிலாஷைகளுக்கான அங்கீகாரத்தை இந்தப் பொதுவேட்பாளர் மூலம் கோருகின்றார்கள் என்ற செய்திதான் - என்றார். (அ-ஒ-113)

## 26 ஆண்டுகளின்...

தம்பலகாமம் - பாரதிபுரம் கிராமத்தில் நிராயுதபாணியாகவிருந்த 8 தமிழர்கள் பொலிஸாரின் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகி உயிரிழந்தனர்.

இதன்போது அங்கு சட்டவிரோத ஒன்றுகூடலில் இருந்ததாக திருகோணமலை பாரதிபுரத்தில் அப்போது பணிபுரிந்த பொலிஸ் அலுவலர்கள் ஐவருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

ஆட்கொலை தொடர்பிலான சட்டவிரோத ஒன்றுகூடலின் பங்காளிகளாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் அலுவலர்கள் ஐவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

வட மத்திய மாகாண முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதியும் தற்போதைய குளியாப்பிட்டிய மேல் நீதிமன்ற நீதிபதியுமான மனோஜ் தல்கொடபிட்டியவால் இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## தங்கக்...

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 வீதியூடாக வவுனியாவுக்குப் பயணித்த காரில் தங்கக் கட்டி கடத்தப்படுவதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் கிடைத்தது. அதற்கு அமைவாக அதிரடிப்படையினர் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக மேற்படி காரை மறித்துச் சோதனையிட்டபோதே, அதிலிருந்து தங்கக் கட்டி மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ஒ-113)

## போதைப்...

சிறிய வெற்றிலைக் கடையில் போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா கலந்த மாவா விற்பனை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. கடையில் இருந்து 70 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து வியாபார நிலைய உரிமையாளரான மகாறம்பைக்குளத்தைச் சேர்ந்த இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தார். (அ-ஒ-110)

## தண்டிக்கப்பட...

சந்திரசேகரன் குற்றம்சுமத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு கல்வியில் ஊழல் மலிந்து காணப்படுகிறது. குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்படும் அதிகாரிகளுக்குத் தண்டனை வழங்கப்படாமல் பதவி உயர்வு வழங்கும் நடைமுறை வடக்கில் காணப்படுவது வடக்கு கல்வியை அழித்துவிடும் செயற்பாடாகவே பார்க்கிறேன்.

ஆசிரிய மற்றும் அதிபர்கள் இட மாற்றத்தில் முறைகேடுகள் இடம்பெறுகின்ற நிலையில் இடமாற்ற சபையின் அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரபல பாடசாலையின் வளங்கள் ஊழல் செய்யப்பட்ட நிலையில் பாடசாலை அதிபருக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலை அதிபர் நிதி நிர்வாக விடயங்களில் முறைகேடுகளுடன் தொடர்புபட்ட நிலையில் அவருக்குத் தண்டனை வழங்கப்படாமல் உயர் பதவியில் அமர்த்துவதற்கான ஏற்பாடுகளை வடக்கு உயர் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

வடக்கில் காணப்படும் நான்கு அமைச்சுகளில் தகுதியான செயலர்கள் இல்லாத காரணத்தால் நிர்வாக ரீதியான முடிவுகள் எடுப்பதில் பிரச்சினை காணப்படுகிறது. தகுதியானவர்களை நியமிக்க வாய்ப்புகள் கிடைத்தும் அவர்களை ஒதுக்கி தமக்குத் தேவையான 'அலிபாபா திருடர்களை' பதவியில் வைத்திருப்பதற்கு சிலர் முயற்சி செய்கின்றனர்.

வடக்கு ஆளுநர் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெறுவதை கண்டும் காணாமல் இருக்கிறாரா? அல்லது அவரும் இத்தகைய செயற்பாடுகளின் பின்னணியில் உள்ளாரா எனச் சந்தேகம் எழுகிறது - என்றார். (அ-ஒ-27)

## அபிவிருத்தி...

திணைக்களங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி அலுவலர்களும் இன்று திங்கட்கிழமை சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இந்தத் தொழிற்சங்கப் போராட்டத்தில் வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து அபிவிருத்தி அலுவலர்களையும் இணைந்து கொள்ளுமாறு வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

நியாயமான தீர்வு கிடைக்காவிடில் நாளைமறுதினம் முதலாம் திகதி முதல் தற்போது நடைமுறையிலுள்ள அனைத்து அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான அனைத்து அரச அபிவிருத்தி நடவடிக்கைகளிலிருந்து நாம் விலகிக்கொள்ளத் தீர்மானித்துள்ளோம் எனப் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலருக்கு வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தினர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-66)

## ஊடகவியலாளர்...

அவரது துவிச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருக்கும்போது மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்த ஆயுததாரிகள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர். அவர் கொல்லப்பட்ட இடத்துக்கு மிக அருகிலேயே இராணுவக் காவலரணும் அந்தக் காலத்தில் அமைந்திருந்தது.

'உதயன்' பத்திரிகையில் பணியாற்றுவதற்கு முன்னர் நமது ஈழநாடு பத்திரிகையிலும் ரஜிவர்மன் செய்தியாளராகப் பணியாற்றியிருந்தார். சட்டவிரோதமாக முன்னெடுக்கப்படும் கடத்தல்கள் தொடர்பில் புலனாய்வுச் செய்தியிடல்களை மேற்கொண்டிருந்தபோதே ரஜிவர்மன் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## காய்ச்சலால்...

மனையில் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்பட்டு சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளார்.

இந்நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிறுமியின் உடல்நிலை மோசமடைந்ததையடுத்து அவர் அச்சுவேலிப் பிரதேச மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளார். உயிரிழந்த சிறுமியின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இறப்பு விசாரணைகளை வலி.கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

இதேவேளை - இதுதொடர்பாக அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ-ஒ-66-26)

## குளிக்கச்...

அந்தக் கடற்பகுதியில் 5 பேர் நேற்று மாலை கடலில் குளித்துக்கொண்டிருந்தபோது ஒருவர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். அவரைக் காப்பாற்ற முயன்றவரும் நீரில் மூழ்கியுள்ளார். இருப்பினும் கடற்படையினரின் உதவியுடன் அவர் உயிருடன் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். காணாமற்போனவரைத் தேடும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (அ-ஒ-19)

## உடற்சோதனையின்...

கவுள்ளது. பரீட்சையின்போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பரீட்சை நிலையத்துக்கு குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னர் பரீட்சார்த்திகள் சமுகமளிக்கவேண்டும். பரீட்சை மண்டபத்துக்கு நுழைவதற்கு முன்னர் ஆண் பரீட்சார்த்திகளை ஆண் ஆசிரியர்களும், பெண் பரீட்சார்த்திகளை பெண் ஆசிரியர்களும் உடற்சோதனைக்கு உட்படுத்துவார்கள்.

பரீட்சையில் மோசடியில் ஈடுபடும் நோக்குடன் ஏதாவது எடுத்துச் செல்லப்பட்டாலோ அல்லது தடை செய்யப்பட்ட உபகரணங்கள் கொண்டு செல்லப்பட்டாலோ சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஏற்கனவே பரீட்சை நடைமுறைகளில் உள்ளதைப் போல தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் பரீட்சை நிலையங்களில் கடமையாற்றுவதில் இறுக்கமான நிலையைப் பேணுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் குயின்ரஸை தொடர்புகொண்டு கேட்டபோது, பரீட்சார்த்திகளை உடற்சோதனை மேற்கொள்வது தொடர்பான விடயம் முன்யோசனையாகவே முன்வைக்கப்பட்டுள்ளது. பரீட்சைத் திணைக்களமே இது தொடர்பில் இறுதியான முடிவை அறிவிக்கும் - என்றார். (அ-ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூர் பேரெழுச்சி

**குஜராத் அணியை அதன் சொந்த மண்ணிலேயே தோற்கடித்தது பெங்களூர்.**



24 பந்துகள் மீதமிருக்கையில் 9 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அதிர்ச்சி யளித்தது பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. குஜராத்தின் ஆட்டம் மந்தமாகவே ஆரம்பித்தது. மத்திய வரிசையில் சாய் சுதர்சன், முன்னதாக களமிறக்கப்பட்ட சாருக்கான் இருவராலும் ஓட்டங்கள் குவிக்கப்பட்டன. 30 பந்துகளில் 58 ஓட்டங்களுடன் சாருக்கான் வெளியேறினாலும், சாய் சுதர்சன் கடைசிவரையில் அதிரடி காட்டினார். அவர் 49 பந்துகளில் 84 ஓட்டங்களைக் குவித்தார். அதேபோன்று மில்லர் 19 பந்துகளில் 26 ஓட்டங்களைப்பெற்றுக் கொடுக்க, 200 ஓட்டங்களை 3 இலக்குகளை இழந்து பெற்றது. பதிலளித்து ஆடிய பெங்களூர் அணி வழமைக்கு மாறாக வெளுத்து வாங்கியது. அணித் தலைவர் டு பிளஸிஸ் 12 பந்துகளில் 24 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்கையில் பெங்களூர் 3.5 பந்துப் பரிமாற்றங்களில் 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அதன் பின்னர் கோலியும், வில்யக்கும் இணைந்து குஜராத் பந்து வீச்சாளர்களை வெளுத்து வாங்கினர்.

32 பந்துகளில் 50 ஓட்டங்களை கோலி பெற்றுக்கொண்டார். மறுமுனையில் வில்யக் 31 பந்துகளில் 50 ஓட்டங்களைக் குவித்தார். அதன் பின்னர் ஆட்டம் சூடு பிடித்தது. குஜராத்தின் சுழல் பந்து வீச்சாளர் களான ரசித் கான், நூர் அஹமட் பந்துகள் எல்லாம் சிக்ஸர்களாக மாறின. இறுதியில் 16 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு இலக்கை மாத்திரம் இழந்து 206 ஓட்டங்களைப் பெற்று பெங்களூர். கோலி 44 பந்துகளில் 70 ஓட்டங்களுடனும், யக் 41 பந்துகளில் 100 ஓட்டங் களையும் ஆட்டமிழக்காது பெற்றனர். யக் இறுதி 50 ஓட்டங்களை வெறும் 10 பந்துகளை சந்தித்துப் பெற்றுக்கொண்டார். அதிரடியாக ஆடிய அவரே ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

(ஒ-5)



# மீண்டெழுந்தது சென்னை
## புள்ளிப்பட்டியலிலும் முன்னேற்றம்

சன்ரைஸஸ் ஹைதராபாத் அணியை 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி மிகப்பெரும் வெற்றியைப் பதிவு செய்தது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி. இதன் மூலம் புள்ளிப்பட்டியலில் மூன்றாம் இடத்தைப் பெற்றது.

சென்னை சேப்பாக்கத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சன் ரைஸஸ் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. பனியைக் கருத்தில் கொண்டு அந்த முடிவை எடுத்திருந்தது. முதலில் களமிறங்கிய சென்னைக்கு மீண்டும் ரஹானே ஏமாற்றினார். பவர் பிளேயில் மந்தமாக ஆட ஆரம்பித்த சென்னை அணி போகப்போக அடித்து ஆடியது. மிர்செல் 32 பந்துகளில் 52 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். அணித் தலைவர் ருத்ராஜ் மற்றும் சிவம் டுபே இருவரும் இணைந்து ஹைதராபாத்தை பிளந்து எடுத்தனர். ருத்ராஜ் மயிரிழையில் 2 ஓட்டங்களால் தொடர்ச்சியாக சதம் அடிக்கும் வாய்ப்பை நழுவ விட்டார். டுபே 20 பந்துகளில் 39 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக்கொடுக்க 3 இலக்குகளை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது சென்னை.

சன்ரைஸஸை பொறுத்தவரையில் அதிரடிக்குப் பெயர்போன அந்த அணி இந்த இலக்கை இலகுவாக ஊதித்தள்ளும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. பனிப்பொழிவின் தாக்கத்தால் அது இன்னமும் இலகுபடுத்தப்படும் என்றபோதும் அதை தகர்த்தது சென்னை அணி. தேஸ் பாண்டே பவர்பிளேயில் ஹைதராபாத்தின் 3 இலக்குகளை வீழ்த்தி நெருக்கடியை ஏற்படுத்த தொடர்ந்து ஜடேஜா அழுத்தங்களைப் பிரயோகிக்க இலகுவான வெற்றி சென்னையை நோக்கி வந்தது. இவற்றுக்கு மேலாக பத்திரனவும் தன் பங்குக்கு இலக்குகளை பிடுங்கி எடுக்க 18.5 பந்துப் பரிமாற்றங்களில் 134 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்து சரணடைந்தது சன் ரைஸஸ். அந்த அணி சார்பில் எய்ட்டன் மார்க்கம் மாத்திரமே 32 ஓட்டங்களை அதுவும் 26 பந்துகளை சந்தித்துப் பெற்றுக்கொடுத்தார். சென்னை சார்பில் பாண்டே 4 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக 98 ஓட்டங்களை விளாசிய ருத்ராஜ் தெரிவானார்.

(ஒ-5)

**தவறவிடப்பட்டுள்ளது**

யாழ்நகரில் Motorola - Moto g play - 2023 வகையைச்சேர்ந்த தொலைபேசி ஒன்று 22.04.2024 தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

**077 358 4487**

## வாகன இறக்குமதித்தடை அடுத்த ஆண்டு நீங்கலாம்

கொழும்பு, ஏப். 29

வாகன இறக்குமதிக்கான தடையை அடுத்த ஆண்டு தொடக்கம் நீக்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக திறைசேரி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனையின் பிரகாரமே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்தத் தீர்மானம் இறுதி முடிவு எடுப்பதற்காக ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ-ஒ-6)

# மைதானத்தில் மோதல்: மூவருக்குக் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 29

அரியாலை நாவலடி மைதானத்தில் இடம்பெற்ற மோதலில் மூவர் காயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அரியாலை நாவலடி மைதானத்தில் நேற்றுக் காலை முதல் துடுப்பாட்ட சுற்றுப்போட்டியொன்று இடம்பெற்று வந்தது. அப்போது மைதானத்துக்குள் 3 மோட்டார் சைக்கிள்களில் சென்ற இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவர்கள் தப்பிச்சென்றுள்ளனர். பின்னர் மீண்டும் மைதானத்தை நோக்கி 5 மோட்டார் சைக்கிள்களில் அவர்கள் வந்துள்ளனர். உ அப்போது மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த இரண்டு வீரர்களுக்கும், பார்வையாளராகக் கலந்து கொண்டிருந்த பெண் ஒருவருக்கும் காயமேற்பட்டநிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(அ-ஒ-125)

**வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை**

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு:

**074 173 7684**

**வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்**

DHL சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற் 321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.

**0777 554 528**

**REDMARK Construction (Pvt) Ltd**

- மேசன், கூலி
- மின் இணைப்பாளர்
- பிளம்பர்

(வேலை தெரிந்தவர், பழக விரும்புவோர்)

இடம் : கோப்பாய் சந்தி, கோப்பாய்
யாழ் நகரை அண்டியுள்ளோர் விரும்பத்தக்கது

CS 358) V-1

தொடர்பு: **077 088 4725/077 122 1769**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.